6

NOVEMBER 2023

**70083/100L1A/ 100H1A**

Time : Three hours    Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு ஓரிரு சொற்களில் விடையெழுதுக

1. தொல்காப்பியம் எத்தனை அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

2. ஒரு, ஓர் ஆகியன எந்த இடங்களில் வரப்பெறும்?

3. ஈரொற்று வருமிடங்களுக்குச் சான்று இரண்டு தருக.

4. எட்டுத்தொகையிலுள்ள அக இலக்கியங்களை எழுதுக.

5. நிலம் மற்றும் வானத்தைக் காட்டிலும் பெரியது எது? ஏன்?

6. பெயர்க்காரணம் தருக:- நாலடியார்

7. குளத்துக்கும் பெண்மைக்கும் அணி எவை?

8. சித்திரக்கூடம் என்றால் என்ன? அங்கு செல்வதற்குரிய வழியினை ஏவியது யார்?

9. “என் செல்வம் எந்நாளும் உன்னுடையதன்றோ” - யார் யாரிடம் கூறியது?

I year → Tamil - I

10. நாடெல்லாம் புலவர் கூட்டம், நகரெல்லாம் பள்ளியீட்டம் என்று தமிழைப் போற்றுபவர் யார்?

11. ஆண்டாளின் வளர்ப்புத் தந்தை யார்? ஆண்டாள் எழுதிய நூல்கள் யாவை?

12. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:

இறைவனை பார்த்ததும் பக்திபெருக்கில் பக்தர்கள் ஆனந்த கண்ணீர் வடித்தனர். கட்டுகடங்காதக் கூட்டத்தால் கோவிலில்த் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே
200 சொற்களில் விடையெழுதுக.

13. தண்டியலங்காரம் எவ்வகை இலக்கண நூலைச் சார்ந்தது? - அதன் சிறப்பினை விளக்குக.

14. வல்லினம் மிகும் இடங்களைச் சான்றுகாட்டித் தெளிவுறுத்துக.

15. 'நின்ற சொல்லர்....' எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலை எழுதி அதன் பொருள் நயத்தைக் குறிப்பிடுக.

16. 'தம் நடை நோக்கார்...' என்ற பழமொழிப் பாடலின் கருத்துக்களை எழுதுக.



17. மானுக்குப் பிணையாக நபிகள் நாயகம் நின்றது ஏன்? - விளக்குக.

18. 'மார்கழித் திங்கள்...' என்ற பாடலில் ஆண்டாள் கூறவருவனவற்றை எடுத்தெழுதுக.

19. 'காடே திரிந்து...' எனத் தொடங்கும் பட்டினத்தார் பாடலின் தத்துவங்களை விளக்கி எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே
500 சொற்களில் விடையெழுதுக.

20. போர் ஒழுக்கத்தைப் பற்றி இலக்கணம் வகுக்கும் புறப்பொருள் வெண்பாமாலை குறித்து எழுதுக.

21. 'சுடர்த்தொடீஇக் கேளாய்' என்ற குறிஞ்சிக் கலிப்பாடலின் கருத்துக்களை விவரி

22. 'அறன் வலியுறுத்தல்' அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் அறச்சிந்தனைகளை எடுத்தியம்புக.

23. பூசலார் நாயனார் புராணத்தின் சிறப்புகளை விரித்துரைக்க.

24. இறைவனின் சிறப்புகளாக மாணிக்கவாசகர் மொழிவனவற்றைத் தெளிவுறுத்துக.

---